பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 28 வெள்ளிக்கிழமை 13.11.2020 கதிர் 239

## தனிமைப்படுத்தப்பட்டது சந்நிதியான் ஆச்சிரமம்!

தொண்டமனாறு செல்வச் சந்நிதியில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமம் தனிமைப்படுத்தல்சட்டத்தின்கீழ்தனிமைப்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் சுகாதார அமைச்சினால் நாடுமுழுவதும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல்

2

### நாடாளுமன்றத்தில் சுமந்திரன் பகிரங்கக் கோரிக்கை

# யுத்தத்தில் வீழ்ந்த உறவுகளை அஞ்சலிக்கும் சட்ட ரீதியான உரித்தைத் தடுக்க வேண்டாம்

## பெருந்தன்மையாக நடக்குமாறு அரசை வலியுறுத்துகிறார் அவர்



கொழும்பு,நவம்பர் 13

"யுத்தத்தில் போராடி மடிந்தவர்களை நினைவு கூர்ந்து, அஞ்சலிப்பதற்கு அவர்களின் பெற்றோருக்கும் குடும்பத்தவர்களுக்கும் ஏனையோரும் உள்ள சட்ட ரீதியான உரிமையைத் தடுக்க 'கொவிட் - 19' விடயத்தையோ வேறு விவகாரங்களையோ பயன்படுத்த வேண்டாம் என அரசைக் கோருகிறேன். இது விடயத்தில் பெருந்தன்மையாக நடந்து கொள்ளுமாறு அரசை வேண்டுகிறேன்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார்.

2

## ஆளுங்கட்சியுடன் இணையுமாறு சரத் பொன்சேகாவுக்கு அழைப்பு

ஆளுங்கட்சியுடன் இணையுமாறு முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு அழைப்பு விடுத்தார் இராஜங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகா முக்கியமான நபர். அவரை நாம் மதிக்கின்றோம். இராணுவத் தளபதியாக இருந்தபோது

2

## யாழ்ப்பாணம் ஆலயங்களில் இடம்பெறும் தீபாவளி வழிபாடுகளில் ஒன்றுகூடாதீர்கள்

### மக்களிடம் அரச அதிபர் மகேசன் வேண்டுகோள்



யாழ்ப்பாணம் மாவட்ட ஆலயங்களில் தீபாவளிப் பூஜை வழிபாடுகளில் ஐந்து பேருக்கு மேல் ஒன்று கூடாதீர்கள் என மாவட்ட அரச அதிபர் க. மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் இன்று மேலும் தெரிவித்ததாவது:-

இந்துக்களின் பண்டிகையாகிய தீபாவளிப் பண்டிகை நாளைகொண்டாடப்படவுள்ள நிலையில் ஆலயங்களில் பூஜை வழிபாடுகளும் இடம் பெறும். அத்தோடு

2



## 'எம்மவர் உயிர்களை நாமே பாதுகாப்போம்'

### யாழில் விழிப்புணர்வுச் செயற்றிட்டம்

'எம்மவர் உயிர்களை நாமே பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணத்தில் இன்று கொரோனா விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

2

## முஸ்லிம்கள் உடல் தகனம் தீர்மானத்தை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்!

### மஹிந்தவிடம் ஐ.நா. பிரதிநிதி ஹனா சிங்கர் வலியுறுத்து



இலங்கையில்கொரோனாவைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடலைத் தகனம் செய்யும் தீர்மானத்தை மறுபரி சீலனை செய்ய வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான அலுவலகம் அரசிடம் கோரியுள்ளது.

இலங்கைக்கான

2

## நீங்குமா ஊரடங்குச் சட்டம்? நாளையே இறுதி தீர்மானம்

இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்ட உத்தரவை நீக்குவதா அல்லது தொடர்வதா என்பது குறித்து நாளை சனிக்கிழமை தீர்மானம் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா இதனை

2

## களுத்துறை சிறைக் கைதிகளும் கூரை மீது ஏறி நின்று போராட்டம்



களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 20 கைதிகள் சிறைக் கூரை மீது ஏறி நின்று போராட்டம் செய்து வருகின்றனர்.

2

## சமூக இடைவெளியைப் புறந்தள்ளி யாழ். நகரில் அலைமோதிய மக்கள்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

கொரோனாத் தடுப்பு சமூக இடைவெளியைப் பேணாது தீபாவளிப் பண்டிகைக் கொள்வனவுக்காக யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் பொதுமக்கள் இன்று அலைமோதினர்.

வழமையாக தீபாவளி பண்டிகையின் முதல் நாள் சனக்கூட்டத்தால் யாழ். நகரம் நிரம்பி வழியும். எனினும், இம்முறை கொரோனா அச்சுறுத்தலால் அனைவரும் வீடுகளில் இருந்தவாறு தீபாவளியைக் கொண்டாடுமாறு சுகாதாரப் பிரிவினரும் பொலிஸாரும் இந்து



மதத் தலைவர்களும் மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். அதனால் யாழ். நகரம் இன்று மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும்,

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## யாழ்ப்பாணம் ஆலயங்களில் இடம்பெறும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்போது இந்துக் கோயில்களில் விரத பூஜைகளும் இடம்பெற்று வருவதால் பொதுமக்கள் கோயிலுக்குச் சென்று ஒன்றுகூடுவதை தவிர்க்க வேண்டும். ஏற்கனவே இந்து கலாச்சார திணைக்களத்தினரால் ஆலயங்களுக்குள் 5 பேருக்கு மேல் செல்ல அனுமதிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, யாழ்ப்பாணத்தில் மக்கள் வீடுகளில் இருந்தவாறு தீபாவளியைக் கொண்டாட வேண்டும். அத்துடன் ஆலயங்களுக்குச் செல்வதையும் தவிர்த்து வீடுகளில் இருந்தவாறு கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.

குறிப்பாக வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தினரால் ஏற்கனவே ஆலயங்களுக்குரிய சுகாதார விதிமுறைகள் தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் ஆலயங்களுக்குச் சென்று ஒன்றுகூடுவதைத் தவிர்த்து வீடுகளிலிருந்து அமைதியான முறையில் இவ்வருட தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட வேண்டும் - என்றார்.

## நீங்குமா ஊரடங்குச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் ஊரடங்கு உத்தரவை மீண்டும் நாடளாவிய ரீதியில் அமுல்படுத்துவது தொடர்பான தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## முஸ்லிம்கள் உடல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இது தொடர்பில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கொரோனா தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலத்தைத் தகனம் செய்யும் நடைமுறையை இலங்கையின் சுகாதார அமைச்சு பின்பற்றுகின்றது. எனினும், சடலத்தைப் புதைப்பதால் நோய் பரவல் ஏற்படும் என்று எந்தவொரு ஆதாரமும் உலக சுகாதார ஸ்தாபனத்தால் வெளியிடப்படவில்லை.

எனவே, இது தொடர்பில் இலங்கை அரசு கொண்டுள்ள நிலைப்பாட்டை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது.

## 'எம்மவர் உயிர்களை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலாநிதி அகிலன் முத்துக்குமாரசாமியின் அனுசரணையுடன், கனடா தென்மராட்சி சேவை நிறுவனத்தால் குறித்த விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் இன்று காலை 10 மணிக்கு தென்மராட்சி - சாவகச்சேரியில் ஆரம்பமான விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தின்போது இலவச முககவசங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

## களுத்துறை சிறைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று மாலை முதல் இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் போதைப் பொருள் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்கள். தங்களது வழக்கு விசாரணைகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பகுப்பாய்வு அறிக்கைகளை விரைந்து சமர்பிக்கும்படி வலியுறுத்தியே இவர்கள் இந்தப் போராட்டத்தில் குதித்திருக்கின்றனர் என்று களுத்துறை சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சமூக இடைவெளி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புடவைக் கடைகள் மற்றும் ஏனைய கடைகளில் பொதுமக்களின் வழமை போன்று அலை மோதினர்.

இதேவேளை, கொரோனாத் தொற்று ஆபத்தால் யாழ். நகரில் அங்காடி வியாபாரம் யாழ். மாநகர மேயரினால் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆளுங்கட்சியுடன் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கம்பீரமாக இருந்தார். இன்று அந்தப் பக்கம் சென்று பலவீனமடைந்துள்ளார்.

கடந்த நல்லாட்சியின்போது அவர் பாதுகாப்பு அமைச்சை எதிர்பார்த்தார். ஆனால், அவருக்கு வனஜீவராசிகள் அமைச்சுப் பதவியே வழங்கப்பட்டது. நிதிகூட உரிய வகையில் ஒதுக்கப்படவில்லை. எனவே, எங்கள் பக்கம் வாருங்கள்; உங்களை மதிக்கின்றோம் - என்றார்.

அத்துடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமும் ஐக்கிய மக்கள் சக்தியினரை நம்பி இன்று தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.


## தனிமைப்படுத்தப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சட்டத்தை மீறி நேற்றும் இன்றும் அன்னதானம் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து, வல்வெட்டித்துறை பொதுச் சுகாதார பரிசோதகரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் ஆச்சிரமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆச்சிரமத்தில் 5 பேர் மட்டும் தங்கியுள்ள நிலையில் அவர்கள் வெளியில் வருவதற்கோ வெளியிலிருந்து யாராவது உள்ளே செல்வதற்கோ தடைவிதிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் அரசியல் கைதிகளின் உயிருக்கு சிறையில் ஆபத்து

## உடன் விடுதலை செய்ய வேண்டும்; சபையில் கஜேந்திரன் வலியுறுத்து



கொழும்பு, நவ. 13

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உயிருக்கும் கொரோனா வைரஸால் அச்சுறுத்தல் – ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது. எனவே, தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமையைக் கருத்தில்கொண்டு நிபந்தையற்று அவர்களை விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உயிருக்கும் கொரோனா வைரஸால் அச்சுறுத்தலும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது. தொற்றா நோய் காரணமாகவே பலருக்கு இந்தக் கொரோனாத் தொற்று பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது என ஜனாதிபதியும் கூறியிருக்கின்றார். அந்தவகையில் மிகவும் கொடிய சட்டமாகிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்தத் தமிழ் அரசியல் கைதிகளில் பலர் இன்று நீரிழிவு நோய் உட்பட தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமையைக் கருத்தில்கொண்டு நிபந்தயைற்று அவர்களை விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது குறைந்த பட்சம் பிணையில் சரி அவர்களை விடுவிக்க வேண்டும் – என்றார்.

## யுத்தத்தில் வீழ்ந்த உறவுகளை அஞ்சலிக்கும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கோரினார்.

அவர் இது தொடர்பில் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இது நவம்பர் மாதம். யுத்தங்களில் வீழ்ந்த நாயகர்களை உலகம் முழுவதும் உள்ள மக்கள் நினைவு கூரும் காலம் இது.

எமது நாடும் கூட துரதிஷ்ட வசமாக மூன்று தசாப்த கால யுத்தத்தைக் கடக்க வேண்டியதாக இருந்தது.

வடக்கிலும் கிழக்கிலும் கூட அரசுக்கு எதிராகப் போராடி வீழ்ந்த உறவுகளின் தாய்மார்கள், சகோதரிகள், சகோதரர்கள், தந்தைமார், பிள்ளைகள் பலர் இருக்கின்றார்கள். அந்த மறைவை அவர்கள் நினைவு கூரும் மாதம் நவம்பர்தான்.

ஜே.வி.பியின் ஸ்தாபகர் றோஹண விஜவீரவை நினைவு கூரவும் கௌரவிக்கவும் இங்கு அனுமதிக்கப்படுகின்றது.

துரதிஷ்டவசமாக உயிரிழந்தவர்களை நினைவு கூரக் கூட இங்கு பாகுபாடு - பாரபட்சம் - காட்டப்படுகின்றது. தமிழர்கள் ஒதுக்கப்படுகின்றார்கள். எங்கள் பெற்றோர்கள் தமது உறவுகளை நினைவு கூர அனுமதிக்கப்படுகின்றார்கள் இல்லை.

நான் இந்த ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையில் இது குறித்துப் பேசுவதற்கு காரணம் உண்டு.

தங்கள் அன்புக்குரிய உறவுகள் புதைக்கப்பட்ட மயானங்களுக்கு, அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, நினைவு கூர்வதற்கு நீண்ட பல வருடங்களைச் சென்று வருவது போல நவம்பர் மாதத்தில் அவர்கள் செல்லும் போது அவர்களைத் தடுப்பதற்கு கொவிட் 19 பிரச்சினையைத்தான் அதிகாரிகள் பயன்படுத்துகின்றனர்.

அந்த நாள்கள் மிக விரைவில் வருகின்றன. அத்தகைய நிலையில் பொலிஸாரும் மற்றைய அதிகாரிகளும் நீதிமன்றங்களைத் தேடி ஓடுவார்கள். 106 பிரிவின் கீழ் (தடை விதிக்கும்) உத்தரவைக் கோருவார்கள். அது பொதுமக்களுக்கு தொல்லை கொடுப்பது பற்றியது. அது இங்கு பொருந்தாது. இது பொதுமக்களுக்குத் தொல்லை ஏற்படுத்தும் விடயமே அல்ல. இது வீதிகளில் நடப்பது அல்ல. தள்ளி மயானத்தில் நடப்பது.

ஆகவே, இது விடயத்தில் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளுமாறு அரசை வேண்டுகிறேன்.

யுத்தத்தில் போராடி மடிந்தவர்களை நினைவு கூர்ந்து, அஞ்சலிப்பதற்கு அவர்களின் பெற்றோருக்கும் குடும்பத்தவர்களுக்கும் ஏனையோரும் உள்ள சட்ட ரீதியான உரிமையைத் தடுக்க 'கொவிட் - 19' விடயத்தையோ வேறு விவகாரங்களையோ பயன்படுத்த வேண்டாம் என அரசைக் கோருகிறேன். - என்றார்.







காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## கொரோனாவுக்கு மத்தியிலும் கூட நீளும் எதேச்சதிகாரப் போக்கு

நாட்டின் ஒரு முக்கிய பின்னடைவு நிலைமையை இன்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

சரியான விடயங்களையும் பிழையான வழிமுறைகளில் செய்தால் அது தவறுதான். அதைத்தான் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் நேற்றும் இன்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கொரோனா வைரஸ் என்ற பேரரக்கன் நமது நாட்டை மட்டுமல்லாமல் முழு உலகையுமே ஆட்டிப் படைக்கும் பேரவலம் தொடர்கின்றது.

உலகம் முன்னர் எதிர்பாராத அவசர நெருக்கடியாக இது கட்டவிழ்ந்தது என்பது உண்மைதான். அதனால் அதனைக் கையாள்வதற்கு அவசர நடைமுறைகளை – ஏற்பாடுகளை – கையிலெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டதும் மறுக்கக் கூடியதல்ல. அவசர நிலைமைகளைக் கையாள்வதற்காக அசாத்தியமான முறைகளை நாடவேண்டிய இக்கட்டு அரசுக்கும் அதிகாரிகளுக்கும் ஏற்பட்டமையும் புரிந்து கொள்ளத்தக்கதே.

ஆனால் அவை அவசர – தற்காலிக – ஏற்பாடுகளாகவோ, நடவடிக்கைகளாகவேதான் இருக்க வேண்டும். அந்த மட்டத்தில் அவை மட்டுப்படுத்தப்பட்டு விட வேண்டும். அந்தத் தவறான அல்லது அசாத்தியமான நடைமுறைகள் தொடரக் கூடாது. நிரந்தரமாகக் கூடாது.

மாறாக, தேவையானால் அம்முறைமைகள் சட்ட ரீதியாக ஒழுங்குபடுத்தப்படலாம்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் திடீரென நேர்ந்தபோது பிரதேசங்களை முடக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்காக ஊரடங்குச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. நாடு எதிர்கொண்ட தவிர்க்க முடியாத – அவசர – நெருக்கடிக்கு மத்தியில் ஊரடங்கு ஒழுங்கு முறையாக – சட்ட ரீதியாக – நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதைப் பார்க்க முடியவில்லை. கவனிக்க இயலவில்லை.

ஆனால், சட்ட விரோதமான முறையில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது, காலக் கிரமத்திலாவது அது நேர்சீர் செய்யப்பட வேண்டும் என்பதை இலங்கையில் எமது பத்திரிகைதான் இப் பத்தியில் முதன்முதலில் விவரமாகச் சுட்டிக் கட்டிக்காட்டியது.

நூறு ஆண்டுகளுக்கு முந்திய – கொலாரா நோயை எதிர்கொள்வதற்காகக் கொண்டுவரப்பட்ட – பொதுச் சுகாதாரச் சட்டங்களே இன்னும் உள்ளன.

இப்போதைய கொரோனா நெருக்கடிகளை முகம் கொடுப்பதற்கு அந்தச் சட்டங்கள் லாயக்கேயற்றவை என்றும் சுட்டிக் காட்டினோம்.

கொரோனா நம் தேசத்தில் பரவத் தொடங்கி எட்டு மாதங்கள் கடந்த பின்னரும் அந்தச் சட்டங்கள் ஒழுங்குபடுத்தப்படவில்லை. சட்டத்துக்கு விரோதமான – மாறான – முறைகளில்தான் ஊரடங்கு இன்னும் அறிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவே அதனை எழுத்தில் உறுதிப்படுத்தியுள்ளது.

போதாக்குறைக்கு ஒரு மாகாணத்தை விட்டு மக்கள் வெளியேறக் கூடாது என்ற உத்தரவை – பிரகடனத்தை – இராணுவத் தளபதி விடுக்கின்றார். அந்த உத்தரவு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தரப்பினரான பொலிஸாரால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஆனால், அப்படி மாகாணங்களுக்கு இடையில் மக்களின் நகர்வைக் கட்டுப்படுத்தும் ஒரு கட்டளையை இடும் அதிகாரம் இராணுவத் தளபதிக்கு சட்ட ரீதியாக இல்லை.

சட்டத்தின் மூலம் செய்யப்பட வேண்டிய பல காரியங்களை, சட்ட முறையாகச் செய்வதற்கோ, அல்லது சட்டத்தை அதற்கேற்ப உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கோ, வழியும், காலமும், வாய்ப்புகளும் இருந்தும் கூட அந்த வழிமுறையை நாடாமல், சட்ட விரோதமாக – எதேச்சாதிகாரமாக – அராஜகமாக – அந்த விடயங்களைத்தொடர்ந்து முன்னெடுக்கின்றது கோட்டா அரசு.

சுமந்திரன் எம்.பி. சுட்டிக் காட்டுகின்றமை போல –

முதலாவது கொரோனாத் தொற்று அலை வீசிய போது, அதை உதாசீனம் செய்து பொதுத் தேர்தலை நடத்தி முடிப்பதில் ஒரே பிடியாக இருந்தது கோட்டா அரசு.

இரண்டாவது அலை வந்தபோது, அதற்கிடையில் இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தை ஏற்படுத்தி தன்னைப் பலப்படுத்துவதில் முழு மூச்சமாக அது நின்றது.

கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளை நேரடியாக செய்து முடிப்பதிலோ, அந்தப் பிரச்சினைகளைக் கையாள்வதற்குத் தேவையான சட்டங்களை உரிய முறையில் உருவாக்குவதிலோ அதன் கவனம் இல்லவேயில்லை என்பதுதான் நாட்டின் துரதிஷ்டம்.

எல்லா விடயங்களையும் சட்டத்தை மதிக்காமல் முன்னெடுக்கும் கோட்டா அரசின் எதேச்சாதிகாரப் போக்கு, எதிர்காலத்தில் நாட்டைப் பெரும் பின்னடைவுக்குள் ஆழ்த்தும் என்பதை இப்போதே எச்சரித்து வைக்கிறோம்.

## வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைப்பது மீள ஆரம்பம்



வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கை, கடந்த ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி, வெளிவிவகார அமைச்சு இடைநிறுத்தியது.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சவேந்திர சில்வா மேலும் கூறியுள்ளவை வருமாறு –

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை, அடுத்த வாரம் முதல் கட்டம் கட்டமாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கு உட்பட வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களையே இவ்வாறு நாட்டுக்கு அழைத்து வருவதற்கு எதிர்ப்பார்த்துள்ளோம்.

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்தமையால் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை அழைத்து வருவதற்கான நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

மேலும், தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்கள் மற்றும் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளில் குறைந்த இடவசதி காணப்பட்டமையும் இதற்குக் காரணமாகும்.

அத்துடன்,வெளிநாட்டிலிருந்து அழைத்து வரப்படவுள்ள இலங்கையர்கள் அனைவரும், 14 நாள்களுக்கு கட்டாய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும். – என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## வடக்கில் கடலட்டை பிடிக்க நிபந்தனையுடன் மீள அனுமதி

யாழ்ப்பாணம்,நவ.14

வடக்கு கடல் பிரதேசத்தில் எதிர்வரும் திங்கட் கிழமை தொடக்கம் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதிக்குமாறு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்டப் பணிப்பாளர்களுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார்.

எனினும் 'ஸ்கின் டைவிங்' எனப்படும் சாதாரண சுழியோடி முறையின் ஊடாக மாத்திரமே மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் எனவும், ஸ்கியூபா எனப்படும் சிலிண்டர் பயன்படுத்தி கடலட்டை பிடிக்க அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதிக்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளில் ஒன்றாக வடக்கு கடலில் கடலடை பிடிப்பது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பரிந்துரையின் அடிப்படையில் தற்காலிக தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு முழு நாட்டையும் முடக்காமால் அடையாளப்படுத்தப்படுகின்ற பிரதேசங்களை மாத்திரம் தனிமைப்படுத்துவன் ஊடாக கட்டுப்படுத்துவது என்ற அரசாங்கத்தின் தற்போதைய தீர்மானத்திற்கு அமைவாக, கடலட்டை பிடிப்பதற்கான அனுமதியை நிபந்தனையுடன் வழங்குமாறு கடற்றொழில் அமைச்சர் மாவட்டத் திணைக்களங்களின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், வடக்கு கடல் பிரதேசத்தில் தடை செய்யப்பட்ட தொழில் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன எனத் தனக்கு தகவல்கள் கிடைக்கின்றன எனத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளை பயன்படுத்துகின்றவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதேபோன்று, இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய செயற்பாடுகள் தொடர்பான – இருநாடுகளுக்கும் இடையிலான – அமைச்சு மட்டக் கலந்துரையாடல் விரைவில் நடைபெறவுள்ளதனால் எல்லை தாண்டும் இந்திய மீனவர்கள் தொடர்பான பதிவுளை தனக்கு சமர்ப்பிக்குமாறும் அவர் தெரிவித்திருந்தார்.

## கொரோனாத் தொற்று இன்னமும் சமூகத் தொற்று ஆகவில்லையாம்!

### கூறுகிறார் சுகாதார சேவைகள் பணிப்பாளர்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று சமூகமயமாக்கப்படவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் நாட்டில் அதிகரித்துள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கொரோனா வைரஸ் தொற்று இன்னும் மூன்றாம் கட்டத்திலேயே உள்ளது. ஆகையினால் அதனைக் கட்டுப்படுத்துவது கடினம் அல்ல.

மேலும், உலக சுகாதார அமைப்பு மற்றும் தொற்றுநோயியல் பிரிவு ஆகியன, வைரஸ் சமூகமயமாக்கப்படவில்லை என்றே கூறுகின்றன.

அந்தவகையில், மினுவாங்கொட மற்றும் பேலிய கொட கொத்தணியில் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் மாத்திரமே கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். குறித்த கொத்தணியில் முதலாவது கட்டத்தில் உள்ளவர்கள் அனைவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா குணமடைவு 11 ஆயிரம் கடந்தது!

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 378 பேர் பூரணமாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

சுகாதார அமைச்சு இன்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் 11 ஆயிரத்து 31 பேர் இதுவரை பூரணமாக குணமடைந்துள்ளனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 723 ஆகக் காணப்படுகின்றது.

இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 22 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் 48 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உள்நாட்டில் கட்டப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல் வெள்ளோட்டத்தை ஆரம்பித்தது இந்தியா!



உள்நாட்டில் கட்டப்பட்ட இந்திய கடற்படைக்கான நீர்மூழ்கிக் கப்பலின் வெள்ளோட்டம் தொடங்கியுள்ளது.

மும்பைக்கு அருகே உள்ள மசாகான் நிறுவனத்தின் கப்பல் கட்டும் தளத்தில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் பாது காப்புத்துறை இணையமைச்சர் ஸ்ரீபத் நாயக் காணொளி தொடர்பாடல் மூலம் பங்கேற்றிருந்தார்.

இந்நிலையில், வெள்ளோட்டத்தைத் ஆரம்பித்துள்ள விகார் என்ற நீர்மூழ் கிக் கப்பல் பல்வேறு பரிசோதனைக ளுக்குப் பின்னர் அடுத்த ஆண்டு கடற்படையில் இணையுமென கடற்படையின் மேற்கு பிராந்திய துணைத் தளபதி ஆர்.பி.பண்டிட் தெரி வித்துள்ளார்.

இந்த நீர்மூழ்கிப் கப்பலின் பெயர், இந்தியப் பெருங்கடலில் நீரடியில் மட்டுமே வசிக்கும் அபாயகரமான விகார் மீனின் பெயரைக் கொண்டுள்ளது.

கடலுக்கு அடியிலும், கடலிலும் போரிடும் திறன் கொண்ட இந்தக் கப்பல் மணிக்கு 22 கிலோ மீற்றர் வேகத்தில் நீருக்குள் செல்லும் என்பது டன் தொடர்ந்து 50 நாள்கள் நீரடியில் இருக்கும்திறனும்கப்பலுக்கு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியா, சீனா மோதலை பயன்படுத்தி மற்றைய நாடுகள் அரசியல் செய்யும்!

### ரஷ்ய துணைத் தலைவர் ரோமன் பாபுஸ்கின்



ஆசிய கண்டத்தின் மிகப்பெரிய சக்தி வாய்ந்த நாடு களான சீனாவும், இந்தியாவும் மோதிக் கொண்டால் இதனை வைத்து மற்ற நாடுகள் அரசியல் செய்யும் என ரஷ்ய துணைத் தலைவர் ரோமன் பாபுஸ்கின் தெரிவித்துள்ளார்.

எல்லை விவகாரத்தில் இந்தியாவிற்கும் சீனாவிற் கும் இடையில் பதற்ற நிலை நீடித்து வருகின்றது. இந்நிலையில், இந்த விவகாரத்தில் ரஷ்யா தற்போது தலையிட்டுள்ளது.

இது தொடர்பாக ர;ய துணைத்தலைவர் தெரிவிக்கை யில் –

ஆசிய கண்டத்தின் மிகப்பெரிய சக்திவாய்ந்த நாடுகளான சீனாவும் இந்தியாவும் மோதிக்கொள்கின் றமை ஒருங்கிணைந்த ஆசிய மற்றும் ஐரோப்பிய பிரதேசத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இருநாடுகளும் எல்லைப் பகுதியில் போர் புரிவதைக் கைவிட்டுவிட்டு சமாதான பேச்சுக்களில் ஈடுபட வேண் டும். சீனா – இந்தியா ஆகிய இரு நாடுகளுமே எஸ்சிஓ மற்றும் பிரிக்ஸ் அமைப்பில் இடம் பெற்றுள்ளன. இந்த இரு நாடுகளும் மோதிக் கொண்டால் மற்ற நாடுகள் இதனை வைத்து அரசியல் செய்ய வாய்ப்புள்ளது.

ஆக்கப்பூர்வமான பேச்சில் இரு நாடுகளும் கட்டா யம் ஈடுபடவேண்டும். இரு நாட்டு இராணுவ உயர் அதி காரிகளும் இது தொடர்பாக விரிவாகப் பேசவேண்டும். கடந்த ஆறு மாதமாக லடாக் பகுதி மூடப்பட்டுள்ளது.

இரு நாடுகளுமே பொருளாதாரம், கலாசாரம், பாது காப்புத்துறை ஆகியவற்றில் வளர்ச்சி அடைந்த நாடு கள். ஜுங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மற்றும் பிரிக்ஸ் குழுமம் ஆகிய இரு அமைப்புகளும் இந்த எல்லை விவகாரத்தில் தலையிட்டு இரு நாடுகளுக்கும் உள்ள பிரச்சினையை தீர்த்துவைக்க வேண்டும் என. – அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனாவால் ஏற்பட்ட அழிவு ஐ.நா.வில் இந்தியா விளக்கம்!

வளரும் நாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியை கொரோனா அழித்து விடக்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஐநா. சபையில் இந்தியா தெரிவித்துள்ளது.

கொரோனா பல லட்சம் பேரை வறுமையில் தள்ளி ஏழைகளாக மாற்றி விட்டதாக இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி திருமூர்த்தி குறிப்பிட்டார்.

இதிலிருந்து மீள்வதற்கான சாத்தியங்களையும் சீர்திருத்தங்களையும் ஒன்று பட்டு உலகம் எதிர்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கொரோனாவால் சுற்றுச்சூழல் தேவைகளை நிரா கரிக்க முடியாது என்று தெரிவித்த திருமூர்த்தி, ஐநாவின் நிதித்திட்டங்களில்பாரிஸ்பிரகடனத்தைநடைமுறைப்படுத் துதல் இடம்பெற வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

## இந்தியாவில் குணமடைவு 81 லட்சத்தைக் கடந்தது

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 81 லட்சத்தை கடந்துள்ளது.

இதன்படி மொத்தமாக 81 லட்சத்து 13 ஆயிரத்து 345 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அத் துடன் 4 லட்சத்து 85 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இதேவேளை நேற்று (வியாழக்கிழமை) புதிதாக 43 ஆயிரத்து 861 பேர் வைரஸ் தொற்றுக்கு இலக் காகியுள்ளனர். இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ள வர்களின் மொத்த எண்ணிக்கை 87 லட்சத்து 27 ஆயிரத்து 900 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 521 பேர் உயிரிழந்துள்ள நிலையில், உயிரிழந்துள்ளவர்களின் எண்ணிக்கை ஒரு லட் சத்து 28 ஆயிரத்து 686 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2 மாதக் குழந்தை கடத்தப்பட்டது 6 மணிநேரத்தில் மீட்ட பொலிஸார்!

ஹைதராபாத்தில் கடத்தப்பட்ட இரண்டு மாத பெண் குழந்தையை பொலிஸார் அதிரடியாக 6 மணி நேரத்தில் மீட்டனர்.

குழந்தைக் கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் தனது மனைவி மற்றும் மனைவியின் தங்கையுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாகச் செய்தியாளர்களிடம் விளக்கிய மாநகர காவல் ஆணையர் அஞ்சனி குமார் முறைப்பாடு வந்த ஆறு மணி நேரத்தில் கண்காணிப்பு கமராக்கள் உதவியுடன் குழந் தையைக் கடத்தியவர்கள் பிடிபட்டனர் எனத் தெரிவித்தார்.




## கொரோனாவிலிருந்து மீண்டார் தெலுங்கு நடிகர் சிரஞ்சீவி!

தெலுங்கு திரைப்பட நடிகர் சிரஞ்சீவி, கொரோனா தொற்று பாதிப்பில் இருந்து மீண்டுள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி சிரஞ் சீவிக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டமையை அடுத்து, அவர் வீட்டிலேயே தன்னைத் தனி மைப்படுத்திக் கொண்டார். இந் நிலையில், 3 பேர் கொண்ட மருத் துவக் குழு மேற்கொண்ட பரிசோ தனையின் முடிவில், அவருக்கு நோய்த்தொற்று இல்லை எனத் தெரியவந்துள்ளது.

மேலும், பிசிஆர் கருவியின் தவறான முடிவால், தனக்கு கொரோனா தொற்று இருப்பதாகக் கூறப்பட்டதாக, சிரஞ்சீவி தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

## பிச்சை எடுப்பதுபோல் நடித்து பணத்தைத் திருடிய பெண்கள்!



திருப்பதியில், பிச்சைஎடுப்பதுபோல் நாடகமாடி, சிறுமியை வைத்து இரண்டரை லட்ச ரூபா கொள் ளையடித்த பெண்க ளின் சிசிடிவி காட் சிகள்வெளியாகிஉள் ளன.

லீலாமகால்சந்திப்பு அருகே உள்ள சிமெண்ட் கடைக்குப் பிச்சை கேட்டு, 3 வட மாநிலப் பெண்கள் கைக் குழந்தையுடன் வந்தனர். மூவரும் கடை உரிமையாளரை சூழ்ந்து கொள்ள, அவர்களுடன் வந்தச் சிறுமி மேசைக்கு அடியில் லாவமாக புகுந்து அதில் இருந்த பணக்கட்டுகளைத் திருடினாள்.

பணம் களவு போனதை தாமதமாக உணர்ந்த கடைக்காரர், சிசிடிவி காட்சிகளை ஆராய்ந்த போது பிச்சை எடுக்க வந்த கும்பல் கைவரிசை காட்டியிருப்பது தெரியவந்தது.

கல்யாணமாலை
வட. சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி – 1987.06.02
மதம் – இந்து K
நட்சத்திரம் – ஆயிலியம்
பாவம் – 19 1/4
செவ்/சூரி – 7இல்
கல்வி – MBBS
தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – UK - Doctor மணமகள் தேவை.

மணமகள் விவரம்
பிறந்த திகதி – 1996.05.05
மதம் – இந்து K
நட்சத்திரம் – அனுசம்
பாவம் – 9 1/4
செவ்/ சூரி – 9இல்
கல்வி – AL
எதிர்பார்ப்பு – வெளிநாடு

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முகநூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# காங்கிரஸ் தலைவர் ராகுல் அரசியல் தெளிவு அற்றவர்

## பராக் ஒபாமா தெரிவிப்பு



காங்கிரஸ் கட்சி தலைவர் ராகுல் காந்தி, அரசியல் தெளிவற்றவராக திகழ்வதாக, அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா தெரிவித்து உள்ளார்.

ஒபாமா எழுதியுள்ள (The Promised Land) என்ற புத்தகம் குறித்து, அமெரிக்காவின் பிரபல நாளிதழான நியூயார்க் டைம்ஸ், தலையங்க விமர்சனம் செய்துள்ளது. அதில், ராகுல் காந்தி ஒரு பதற்றமான, அறியப்படாத குணம் கொண்டவர் என்று, ஒபாமா தனது புத்தகத்தில் கூறியிருக்கிறார் எனக் குறிப்பிட்டுள்ளது.

ஆசிரியரிடம், பாடத்தை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் மாணவரைப் போலவே, ராகுல் காந்தி, அதீத ஆர்வம் கொண்டவராகவே இருக்கின்றார் எனவும், ஒபாமா குறிப்பிட்டுள்ளார் என, நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது. மேலும், ஒரு விடயத்தை முழுமையாக அறிந்து கொள்வதில், ஆர்வம் இல்லாதவராக வும், ராகுல்காந்தி திகழ்கிறார் என்றும் ஒபாமா எழுதியிருப்பதாகக் கூறியுள்ளது.

# 8 குழந்தைகள் கொலை செவிலியர் ஒருவர் கைது!



இங்கிலாந்தில் 8 பச்சிளம் குழந்தைகளைக் கொலை செய்தது டன் 10 குழந்தைகளை கொலை செய்ய முயன்றார் என செவிலியரை பொலிஸார் கைது செய்தனர்.

2015 முதல் 2016 ஆம் ஆண்டு வரை செஸ்டர் நகரில் உள்ள வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகள் மர்மமான முறையில் அடுத்தடுத்து உயிரிழந்தன.

இது தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸார், அந்த வைத்தியசாலையில் பணியாற்றி லூசி லெட்பியை 2018 ஆம் ஆண்டு கைது செய்தனர். குற்றம் நிரூபிக்கப்படாதமையால் 2 முறையை லூசி லெட்பி விடுவிக்கப்பட்ட நிலையில், தற்போது மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஐரோப்பிய நாடுகளைத் தொடர்ந்து அமெரிக்காவில் வேகமெடுக்கும் தொற்று!

ஐரோப்பிய நாடுகளைத் தொடர்ந்து அமெரிக்காவிலும், கொரோனா தொற்று பரவலின் வேகம் மீண்டும் அதிகரித்துள்ளது.

நேற்று ஒரே நாளில் ஒரு லட்சத்து 43 ஆயிரத்திற்கும் அதிகமானோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 8 லட்சத்தைக் கடந்துள்ளது.

ஆயிரத்து 100 இற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பலனின்றி உயிரிழக்க, பலியானவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 48 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

அமெரிக்கர்கள் மாஸ்க் அணிவது, தனிமனித இடைவெளி போன்றவற்றை தீவிரமாக பின்பற்றுவதன் மூலம், நோய்த்தொற்று பரவலைக் குறைக்க முடியும் என தொற்று நோய் நிபுணர் அன்ரனி பாசி தெரிவித்துள்ளார்.



# லிபியா கடலில் மூழ்கியது படகு!

## 74 அகதிகள் பலி?

லிபியா அருகே கடலில் படகு மூழ்கியதில் அதில் பயணித்த 74 அகதிகள் உயிரிழந்தனர் என அஞ்சப்படுகிறது.

ஐரோப்பியா செல்ல 121 பயணிகள் படகில் சென்ற போது கடலில் எழுந்த பேரலைகளால் சுமை தாங்காமல் படகு கவிழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இந்தப் படகில் இருந்த குழந்தைகள், பெண்கள் உட்பட 74 பேரும் கடலில் மூழ்கி இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கடற்படையினர் மற்றும் கடலோர காவல்படையினர் இரவு பகல் என மீட்பு முயற்சியில் ஈடுபட்டனர் . புதிதாகப் பிறந்த குழந்தை உட்பட இது வரை 47 பேரை உயிருடன் மீட்டனர். அவர்கள் ஹெலிகொப்டர்கள் மூலமாகக் கரைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

தொடர்ந்து இறந்தவர்களின் உடல்களை மீட்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் மெடிட்டேரியன் கடல் பகுதியில் இது போன்ற எட்டு படகு விபத்துகள் நேரிட்டன.


# சவூதியில் மரம் வெட்டினால் 10 ஆண்டுகள் சிறை விதிப்பு!

சவுதி அரேபியாவில் மரங்களை வெட்டினால் 59 கோடியே 75 லட்சம் ரூபா அபராதமும், 10 வருடங்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

பாலைவன நாடான சவுதியில், சுற்றுச்சூழல் வளத்தைப் பெருக்குவதற்காக பசுமைத் திட்டத்தை அந்நாட்டு அரசு முன்னெடுத்துள்ளது. அதன்படி, அடுத்த ஆண்டு ஏப்ரலுக்குள் நாடு முழுவதும் ஒரு கோடி மரங்களை நடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், சுற்றுச்சூழல் அழிப்புக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், இதன் ஒரு பகுதியாக மரங்களை வெட்டுவதற்கும், எடுத்துச் செல்வதற்கும், அவை சார்ந்த மண் வளத்தை அபகரிப்பதற்கும் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# உக்ரைன் அதிபருக்குக் கொரோனா அவர் வைத்தியசாலையில் சேர்ப்பு!



கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட உக்ரேன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த வார தொடக்கத்தில் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, நிதியமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் அதிபரின் உதவியாளருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், தனது வீட்டில் அதிபர் ஜெலென்ஸ்கி தனிமைப்படுத்திக் கொண்டார்.

இந்த நிலையில், தன்னால் மற்றவர்களுக்கு கொரோனா தொற்றுப் பரவுவதைத் தடுக்க அதிபர் வைத்தியசாலைக்கு மாறி உள்ளார் எனவும் அவரது உடல்நிலை சீராக உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வெள்ளை மாளிகை தலைமை அதிகாரியாக பைடனின் நண்பர் ரோன் கெயின் நியமனம்!



தமது நீண்ட நாள் உதவியாளரான ரோன் கெயின் என்பவரை, வெள்ளை மாளிகை பணியாளர் தலைமை அதிகாரியாக ஜோ பைடன் நியமித்துள்ளார்.

இந்த பணியில், அதிபரின் செயல் அலுவலகத்தின் மேற்பார்வை பொறுப்பை கவனிப்பதுடன், அதிபரின் செனட் ஆலோசகராகவும் ரோன் கெயின் செயல்படுவார்.

முக்கிய பிரச்சனைகளில் புதிய அதிபரான ஜோ பைடனுக்கும், துணை அதிபரான கமலா ஹாரிஸுக்கும் உதவக் கூடிய திறமையாளர்கள் குழுவையும் ரோன் கெயின் ஏற்படுத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009 மற்றும் 2014 இல் ஏற்பட்ட பொருளாதார, சுகாதார நெருக்கடி காலக்கட்டங்களில் ரோன் கெயின் சிறப்பாகப் பணியாற்றியவர் என ஜோ பைடன், ரோன் கெயினை பாராட்டி உள்ளார்.

# மியான்மர் தேர்தலில் வெற்றி பெற்ற ஆங் சான் சூகிக்கு மோடி வாழ்த்து!



மியான்மர் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ஆங் சான் சூகிக்கும் அவரது ஜனநாயக தேசிய லீக் கட்சிக்கும் பிரதமர் மோடி வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான டுவிட்டர் பதிவில் தேர்தல்களை வெற்றிகரமாக நடத்துவது மியான்மரில் நடந்து வரும் ஜனநாயக மாற்றத்தின் மற்றொரு படியாகும் என்று குறிப்பிட்டுள்ள அவர், இந்தியா மியான்மர் இடையேயான பாரம்பரிய நட்பை வலுப்படுத்த தொடர்ந்து இணைந்து பணியாற்றுவோம் என்றும் கூறியுள்ளார்.

# இந்தியாவில் இருந்து சீனாவுக்கு ஏற்றுமதியான மீன்களில் கொரோனா!



இந்திய நிறுவனத்திடம் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மீன்களில் கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டதால், இறக்குமதிக்கு ஒருவாரம் தடை விதிப்பதாகச் சீனா தெரிவித்துள்ளது.

இந்தியாவின் பாசு இன்டர்நேசனல் நிறுவனம் சீனாவுக்கு அனுப்பிய பதப்படுத்திய மீன்களின் மாதிரிகளை எடுத்துச் சோதனை செய்ததில் 3 மாதிரிகளில் கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டதாகச் சீனச் சுங்கத்துறை தெரிவித்துள்ளது. இதனால் அந்த நிறுவனத்திடம் இருந்து மீன்களை இறக்குமதி செய்ய ஒருவாரத்துக்குத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

# மேலைத் தேசத்தில் சைவசமயத்தை மேலோங்கச் செய்த

# சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்

யாழ்ப்பாணக் குடாநாடு சித்தர்கள், ஞானிகள், யோகியர் என்ற வகையில் ஒரு ஞானப் பரம்பரையைத் தோற்றுவித்த பெருமைக்குரியது. இந்த ஞானபரம்பரையில் ஒருவராக தோற்றம்பெற்றவர்தான் தவத்திரு சிவயோக சுவாமிகள். இவர் யாழ்ப்பாணத்து மாமுனிவர் என அடியார்களால் போற்றப்பட்டு வந்தவர். இவரது சமாதிக் கோயிலும் ஆச்சிரமும் யாழ்.கொழும்புத்துறை கிராமத்தில் அமைந்திருப்பதுடன், அங்கு இன்றும் பூசை வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.


ஒரு சீடர் பரம்பரையை உருவாக்கிய பெருமை சிவயோக சுவாமிகளுக்கு உண்டு. இவரது அருள்பெற்ற ஞானியர் பரம்பரையில் உள்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லா, மேலைநாடுகளைச் சேர்ந்த பிற இனத்தவர்களும் அடங்குகிறார்கள். இவர்களுள் ஒருவராக சிறப்பித்துச் சொல்லப்படுபவர்தான் அமெரிக்காவைச் சேர்ந்த தவத்திரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்.

சிவயோக சுவாமிகளின் மகிமையைக் கேள்வியுற்ற இருபத்தியொரு வயது அமெரிக்க இளைஞர் ஒருவர் 1949 ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்தார். யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அந்த அமெரிக்க இளைஞர், வைகாசி விசாக நன்நாளன்று சிவயோக சுவாமிகளைச் சந்தித்தார். மக்களோடு மக்களாக சாதாரண நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் ஒரு சிலர் இறைவனால் ஆட்கொள்ளப்படுவதால், இறையுணர்வு கைவரப்பெற்ற அனுபூதிமான்களாக மாறிவிடுகிறார்கள். இந்த வகையிலேயே அந்த அமெரிக்க இளைஞரும் சிவயோக சுவாமிகளின் சந்திப்புக்குப் பின் இறைபக்குவ நிலைபெற்று அவரது சீடரானார்.

சிவயோக சுவாமிகள் மேற்படி அமெரிக்க இளைஞருடனான முதலாவது சந்திப்பின்போது பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசம் செய்து, வாழ்வின் பணிகள் குறித்து அறிவுரைகளையும் வழங்கி, 'சுப்பிரமுனிய' எனும் நாமாகரண தீட்சையையும் கொடுத்தமை மட்டுமல்ல, இளைஞரின் முதுகில் பலமாக ஓங்கி அடித்து, 'இந்த அடி அமெரிக்காவிலே கேட்கும்! இனி உலகெங்கும் சென்று சிங்கம்போல் கர்ச்சிப்பாய்! நீ பல ஆலயங்களை அமைத்து பலருக்கு உணவளிப்பாய்!' என ஆசி வழங்கி அனுப்பிவைத்தார். அன்று முதலாக அந்த அமெரிக்க இளைஞர் சுப்பிரமுனிய சுவாமிகள் என அடியார்களால் அழைக்கப்பட்டு போற்றப்பட்டார்.

சுப்பிரமுனிய சுவாமிகள் சிலகாலம் யாழ்.குடாநாட்டில் தங்கியிருந்தபோது, சிவயோக சுவாமிகளின் ஆசியுடன், அளவெட்டி கிராமத்தில் ஆச்சிரமமொன்றையும், பசுபதீஸ்வரர் ஆலயத்தையும் ஸ்தாபித்தார். இன்று உலகளாவிய ரீதியில் சேவையாற்றி

இன்று அவரது குருபூசை தினம்



வரும் சைவசித்தாந்த தர்மசபை அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில்தான் ஆரம்பமாகியிருப்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

இலங்கையிலிருந்து அமெரிக்கா திரும்பிய சுப்பிரமுனிய சுவாமிகள், அங்கு செய்யவேண்டிய ஆன்மீக பணிகளுக்குத் தன்னை ஆயத்தமாக்கும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டார். 1957 ஆம் ஆண்டு அமெரிக்காவின் கலிபோர்னியா நகரில் இமாலய கலாபீடத்தை நிறுவியமையுடன், மேலைத்தேசத்தின் முதலாவது இந்துக் கோவிலையும் ஸ்தாபித்தார். 1970 ஆம் ஆண்டு, அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் ஒன்றான குவை எனும் தீவில் புனித வைலுவ நதிக்கரையிலுள்ள பெரும் நிலப்பரப்பில் சைவ ஆதீனத்தை நிறுவினார். இங்கு ஆறு அடி உயரமான நடராஜப் பெருமானை மூலமூர்த்தியாகக் கொண்ட ஆலயத்தையும் அமைத்தார்.

1975 ஆம் ஆண்டு மாசி மாதம் சிவபெருமான் சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு ஓர் அகக்காட்சியை அருளினார். இதன்படி புனித வைலுவ நதிக்கரையில் சுயம்புலிங்கமொன்றைக் கண்டார். இதனை மையமாகக்கொண்டே சன்மார்க்க இறைவன் கோவிலை முற்றிலும் கருங்கற்களைக் கொண்டு உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை சுவாமிகள் மேற்கொண்டார். அதற்கான பணிகள் இடம்பெற்றுவரும் வேளையில், 1987 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் இங்கு பிரதிஷ்டை செய்வதற்காக ஆறு கோணங்கள் கொண்டதும், 39 அங்குல உயரமானதுமான ஸ்படிகலிங்கமொன்றும் சுவாமிகளுக்கு கிடைத்தது. ஆலயம் அமைக்கப்பட்டு வரும் வளாகத்தில், நூற்றெட்டுவில்வமரங்களுக்குமத்தியில்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சுயம்புலிங்கேஸ்வரருக்கு நித்திய பூசைகள் இடம்பெற்று வருகின்றன.

**ரிஷி தொண்டுநாதன்**

சுப்பிரமுனிய சுவாமிகள் 1979ஆம் ஆண்டு ஹின்ரூசியம் ருடே(Hinduism Today) என்ற பெயரிலான சஞ்சிகையொன்றை ஆரம்பித்து வைத்தார். ஹவாய் சைவ ஆதீன வெளியீடான இந்த சஞ்சிகை சர்வதேச ரீதியில் இந்துக்களின் குரலாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. இந்து சமயம் சார்ந்த பல நூல்களையும் சுவாமிகள் எழுதியிருக்கிறார்.

சுப்பிரமுனிய சுவாமிகள் பல தடவைகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளார். இவர் 1982 ஆம் ஆண்டு இங்கு வந்தபோது, கோப்பாய் கிராமத்தில் கோட்டத்தை ஸ்தாபித்தார். மீண்டும் 1983 ஆம் ஆண்டு இலங்கை வந்தபோது, கோப்பாய் கிராமத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சாந்திலிங்கேஸ்வரப் பெருமானை தனது திருக்கரங்களால் பிரதிஷ்டை செய்துவைத்தார்.

1983 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின் சுவாமிகள் இலங்கைத் தமிழ் அகதிகள் நிவாரண நிதியமொன்றை ஆரம்பித்து, அதனூடாக ஏராளமான பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கியிருப்பதையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

சுப்பிரமுனிய சுவாமிகள் தனது சமய, சமூக நலப் பணிகளின் மற்றொரு செயற்பாடாக இந்து கலாசார அறக்கட்டளையை உருவாக்கி, அதனூடாக உலகளாவிய ரீதியில் ஆதரவற்றோர் மற்றும் முதியோருக்கான இல்லங்கள், சமய நிறுவனங்கள் போன்றவற்றுக்கு உதவி வந்துள்ளார். இந்த அறக்கட்டளை ஊடான மேலான பணிகள் ஹவாய் சைவ ஆதீனத்தால் இப்போதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1986 ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற உலக சமய நாடாளுமன்ற நிகழ்வின் போது, சுவாமிகளது உலகளாவிய சமய சமூகப் பணிகளை பாராட்டி 'ஜகதாச்சாரியார்' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2000 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் யூதாண்ட்(முன்னாள் செயலாளர் நாயகம்) ஞாபகார்த்த சமாதான விருது வழங்கப்பட்டதுடன், ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுவதற்கும் சுவாமிகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

சுப்பிரமுனிய சுவாமிகள் 2001 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் திகதியன்று நள்ளிரவு சித்திரை நட்சத்திரத்தில் மகாசமாதியடைந்தார். இன்று (13.11.2020)சுவாமிகளது குருபூசை தினமாகும்.



# யுத்தம் பாதித்த வடக்கு தொடர்ந்து புறக்கணிப்பு!

## கஜேந்திரன் எம்.பி. காட்டம்




யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு பகுதியில் எந்த வித அபிவிருத்திக்கும் 2020 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இத்தகைய செயற்பாடுகள் தொடர்ந்தால், அரசாங்கம் பாரிய தோல்வியைச் சந்திக்க நேரிடுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) 2020 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான விவாதம், நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ளது.

அந்த நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கஜேந்திரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

கடந்த தேர்தல் காலத்தின்போது பலருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

சுதந்திரக் கட்சி சார்ந்தவர்கள் மற்றும்பொதுஜன பெரமுன கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு இவ்வாறான வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

பருத்தித்துறையில் இவ்வாறு பொறுப்பேற்றுக் கொண்ட ஒருவரின் பதவி கடந்த ஒகஸ்ட் மாதம் நிறுத்தப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் உள்ள பட்டியலில் அவரின் பேர் இருந்ததாகவும் பின்னர் வந்த பட்டியலில் இல்லையென்றும் அவர் இடை நிறுத்தப்பட்டுள்ளார்.

இதுபோன்று 600 இற்கும் அதிகமானவர்களின் பெயர்கள் இவ்வாறு நீக்கப்பட்டுள்ளன. வட.பிராந்திய போக்குவரத்துத் திணைக்களத்தில் தகுதியற்றவர்கள் நியமிக்கப்படுகின்றனர். தேர்தல் காலத்தில் தமக்குப் பணியாற்றியவர்கள் இவ்வாறு பதவியில் இணைக்கப்படுகின்றனர்.

இரண்டு அரசாங்கங்களும் மாறி மாறி இவ்வாறான செயற்பாடுகளையே தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட செலவீனங்களையும் தாண்டிய சட்டவிரோதமான செலவீனங்களுக்கும் சேர்த்து அங்கீகாரம் பெறுவதற்கு விவாதம் நடைபெறுகிறது. இந்த விவாதத்தில் எமது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இலங்கையில் மிகவும் புகழ்பெற்ற வட.மாகாண போக்குவரத்து சபையானது சீரழிந்து வருகிறது. ஏதாவது விபத்தொன்று இடம்பெற்றால் இதற்கான தீர்ப்புக்காக சம்பந்தப்பட்ட சாரதிகள் கொழும்புக்கு அனுப்பப்படுகின்றனர். ஏனைய மாகாணங்களில் அவ்வாறு இல்லை.

வட.மாகாணத்தின் கல்வி நிலைமை மோசமாகியுள்ளது. கல்வி நிர்வாக சேவையின் வகுப்பு ஒன்றைச் சேர்ந்த வட.பகுதியை சேர்ந்தவர்களுக்கு சம்பள உயர்வு இதுவரை வழங்கப்படவில்லை.

பாடசாலைகளை தேசிய பாடசாலைகள் ஆக்குகின்றோம் என்ற போர்வையில் பாடசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு செல்லும் நிலைமைகள் காணப்படுகின்றன.

மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ள முன்பள்ளிகளுக்கு வசதிகள் எதுவும் இல்லை. இவ்வாறான நிலையில் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் முன்பள்ளிகளை அமைத்து ஆசிரியர்களுக்கு சம்பளங்களை வழங்கி அவற்றை நிர்வகித்து வருகிறது.

மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ள விடயம் வேண்டும் என்றே சீரழிக்கப்படுகின்றன. இந்த மாதிரியான முறைகேடான செயற்பாடுகளை அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

யுத்தத்தால் அழிக்கப்பட்ட வடபகுதியில் எந்தவித அபிவிருத்திக்கும் 2020ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்த நிலைமை தொடர்ந்தால் அரசாங்கம் பாரிய தோல்வியொன்றைச் சந்திக்கும். - என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# உயிரிழந்த உடல்களின் தகனம் கலாசாரத் தேர்வுகளின் அடிப்படை!

## ஐ.நா. கருத்துரைப்பு

உயிரிழந்த உடல்களின் தகனம் என்பது அவரவர் கலாசாரத் தேர்வுகளை அடிப்படையாக கொண்டவை என ஐ.நா.அபிவிருத்தி திட்டத்தின் பிரதிநிதியுமான ஹனா சிங்கர், இலங்கை அரசாங்கத்துக்கு குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவதற்கு, முஸ்லிம் சமூகம் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது.

அதேபோன்று முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கை நியாயமானது என்றதன் அடிப்படையில் பல சமூக அமைப்புக்களும் அவர்களுக்கு ஆதரவாகக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே, இந்த விடயம் தொடர்பாக இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு, ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதியுமான ஹனா சிங்கர் எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

தொற்று நோயால் இறந்தவர்கள் மூலம் வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு, அந்த உடலங்கள் தகனம் செய்யப்பட வேண்டும் என்ற பொதுவான அனுமானம், ஆதாரங்களால் உறுதிப்படுத்தப்பட்டவை அல்ல.

அதற்குப் பதிலாக தகனம் என்பது அவரவர் கலாசாரத் தேர்வுகளை அடிப்படையாகக் கொண்டவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்யும்போது சிறுபான்மையினரின் உரிமைகளை அரசாங்கம் மதிக்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும், கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம் என உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களை அரசாங்கம் பின்பற்றவேண்டும் எனவும் அந்த சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# பிரதேச ரீதியாக 10 பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்க நடவடிக்கை என பீரிஸ் தகவல்

புதிய அராங்கத்தின் கொள்கைத் திட்டத்துக்கு அமைவாக பிரதேச ரீதியாக 10 பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் இன்று கல்வி அமைச்சில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

உயர்கல்வி நிறுவனம் இல்லாத 10 மாவட்டங்களைத் தெரிவுசெய்து அந்த மாவட்டங்களில் பல்கலைக் கழகங்களை ஸ்தாபிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

அத்துடன் அதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக கல்வி அமைச்சு



விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொலைக்கல்வி நிகழ்ச்சியில் பங்கேற்காத மாணவர்களுக்கு விசேட திட்டம் அறிமுகம்

## இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த



கொழும்பு, நவ. 13

தொலைக்கல்வி முறையின் மூலம் மீள ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ள பாடசாலை தொலைக்கல்வி நிகழ்ச்சியில் பங்கேற்க முடியாமல் போகும் மாணவர்களுக்கு, பாடவிதானங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்ட பாடங்களை தமது பாடசாலைகள் ஊடாக பெற்றுக் கொள்ளும் முறை வகுக்கப்பட்டுள்ளது.

கொரோனா நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள கல்வி நடவடிக்கைகளை தொலைக்கல்வி முறையின் மூலம் மீள ஆரம்பிக்கப்படவுள்ள கூட்டு வேலைத்திட்டம் தொடர்பாக கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக் கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களின் மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக இம்மாதம் 15 ஆம் திகதி முதல் இந்த விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்

தரம் மூன்றில் இருந்து கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரம் வரையான வகுப்புக்களின் பாடங்களை பூர்த்தி செய்யும் வகையில், பிரபல ஆசிரியர் குழாமின் பங்கேற்புடன் குறிப்பிட்ட பாடங்களைத் தொகுத்து ஒலிப் பதிவு செய்யும் நடவடிக்கை இந்நாள்களில் இடம்பெறுகின்றது.

இதன் பின்னர் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடாக வாரத்தில் 7 நாள்களும் வீட்டில் இருந்தவாறு மாணவர்கள், நிகழ்ச்சியில் பங்கேற்க சந்தர்ப்பம் கிட்டும். தமிழ் மற்றும் சிங்கள மொழிமூல மாணவர்களுக்காக இந்த நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர ஒன்லைன் ஊடாகவும் இந்த வசதி கிடைக்கவிருக்கிறது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க முடியாமல் போகும் மாணவர்களுக்கு, பாடவிதானங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்ட பாடங்களை தமது பாடசாலைகள் ஊடாக பெற்றுக் கொள்ளும் முறை வகுக்கப்பட்டுள்ளது என்றும் கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த மேலும் தெரிவித்தார்.


## வீடு தேவை

ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதியில் சிறிய கைத்தொழில் செய்ய உகந்த விசாலமான வீடு தேவை.

தொடர்புகளுக்கு -
0760117002


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.11.2020 இல் வெளியிடப்பெற்றது.